## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.132/2018

2024 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 19.08.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுதா | ஜாதி | : |
| த /பெயர் | : செல்லதுரை | மதம் | : |
| கிராமம் | : | தொழில் | : சார்பதிவாளர் |
| வட்டம் | : | வயது | : |

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன. கடந்த 1618/1997 ல் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிதழ் நகல் எடுத்து வந்துள்ளேன். ஒரு ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும் போது தற்போது உள்ள நடைமுறையில் எழுதி கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவர் இருவரது கையொப்பம் அவசியம் என்றால் சரிதான். ஆனால் ஆவண 1996 ல் ஆவணம் தாக்கல் செய்யப்பட்ட போது எழுதி கொடுப்பவர் மட்டும் கையொப்பம் செய்திருந்தாலே போதுமானது என்றால் சரிதான். பத்திர பதிவு எழுதி கொடுக்கும் ஆவணத்துடன் பத்திரங்கள் மதிப்பு குறைப்பு விதி 3/1968 ஸ்டேட்மெண்ட் வைக்கவேண்டும் என்றால் சரிதான். ஆனால் ஒரு சொத்திற்கு மேற்பட்ட சொத்துக்களை கிரயம் செய்யும் போது மேற்கண்ட ஸ்டேட்மெண்ட் வைக்கப்படும். ஒன்றிற்கு மேற்பட்ட சொத்துக்களை கிரயம் செய்யும்போது 3(1) ஸ்டேட்மெண்ட் வைப்பது வழக்கம் என்றால் சரிதான்.

2. ஒரு ஆவணம் எங்களிடம் முன்னிலைப்படுத்தப்படும் போது எழுதி கொடுப்பவர் கையொப்பம் உள்ளதா என்பது குறித்து சரிப்பார்க்கவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு ஒவ்வொரு பக்கத்திலும் எழுதி கொடுப்பவர் கையொப்பம் இல்லை என்றால் அந்த ஆவணம் முடிவுறா ஆவணம் என்று சொல்லி பதிவு செய்யாமல் திருப்பி கொடுத்துவிடுவோம். எழுதி கொடுப்பவரின் கையொப்பம்

மேற்படி ஆவணங்களில் இருந்து சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பத்திர் பதிவு அலுவலகத்திற்கு நேரடியாக வந்து பதிவு செய்து ளெனகாடுக்க தவறும் பட்சத்தில் சார்பதிவளார் அலுவலகத்தில் இருந்து அவருக்கு அறிவிப்பு அனுப்பி விசாரணை மேற்கொண்டு அதில் ஒரு முடிவு காணமுடியும் என்றால் சரிதான்.

3. ஒவ்வொரு நாளிலும் பதிவு செய்யப்படும் ஆவணங்கள் குறித்து தனியாக கையேடு சார்பதிவாளர் பராமரித்து வருகிறதா என்றால் இல்லை. ஆனால் இன்டெக்ஸ் புத்தகம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆவண எண். 205/1996 ரை முடிவுறா ஆவணம் என்று சொல்லி அப்போதைய சார்பதிவளார் அவர்களால் பதிவு செய்ய மறுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு மறுக்கப்பட்ட ஆவணத்தை யார் முன்னிலைப்படுத்துவார்களோ அவர்களிடமே திருப்பி கொடுத்துவிடுவோம் என்றால் சரிதான். எழுதிக்கொடுப்பவரின் கையெழுத்து ஒவ்வொரு பக்கத்திலும் இல்லை என்றும் முடிவுறா ஆவணம் என்று சொல்லி திருப்பி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. ஆவண எண். 208/1996 யை முடிவுறா ஆவணம் என்று சொல்லி திருப்பி கொடுப்பதற்கான ஆவணங்கள் ஏதும் பராமரிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சார்பதிவாளர் அவர்களால் அந்த ஆவணத்தில் முடிவுறா ஆவணம் என்று எழுதப்பட்ட குறிப்பு இருக்கும்என்றால் சரிதான். பதிவு செய்யப்படும் கிரைய சாசன ஆவணத்தில் கிரையம் செய்து கொடுக்கப்படும் வேறு ஒருஇடத்தில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்றும் அடமானம் வைத்து கடன் பெறப்பட்டுள்ளது போன்ற வாசகங்கள் இருந்தால் பத்திரப்பதிவு செய்யாமல் திருப்பி கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். யாரால் சார்பதிவாளர் அலுவலகத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதோ அவரால் திரும்ப பெற்றுக்கொண்டு மாவட்ட பத்திர பதிவு அலுவலகத்தில் கட்டாய பதிவு தாக்கல் செய்யப்படும் என்றால் சரிதான். முடிவுறா ஆவணம் என்று சொல்லி ஒரு ஆவணம் பதிவு செய்யப்படாமல் திருப்பி கொடுக்கப்படும் பட்சத்தில் அவற்றை மாவட்ட பத்திர பதிவு அலுவலகத்தில் முன்னிலைப்படுத்தப்படுவது என்றால் சரிதான். மாவட்ட பத்திர பதிவு அலுவலகரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில்தான் சார்பதிவாளர் அவர்களால் ஆவண எண். 1618/1997 யை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பி 205/1996 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாவட்ட பத்திர பதிவு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இணைத்துதான்

5. ஆவண எண். 1618/1997 பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் மாவட்ட பத்திரவ பதிவு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் இல்லை. ஏற்கனவே சார்பதிவாளரால் பதிவு செய்ய இயலாது என்று திருப்பப்பட்ட ஆவணத்தை மீண்டும் சார்பதிவாளரால் பத்திர பதிவு செய்யவேண்டும் என்றால் மாவட்ட பத்திர பதிவு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இணைத்து கொடுத்த பிறகுதான் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.2 ஆவணம் 3 வது பக்கத்தில் மாவட்ட பத்திர பதிவு அலுவலரால் முடிவுறா ஆவணம் 205/1996 யை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வா.சாஆ. 2 ஆவணத்தில் ஆவண எண். 3/1997 சான்றிட்ட நகல் எங்களது அலுவலகத்தில் இருக்கும் என்றால் சரிதான். கட்டாய பதிவிற்கு ஒரு ஆவணம் தாக்கல் செய்யும்போது அதை பதிவும் செய்யும் நபர் மற்றும் எதிர்மனுதாரருக்கு மூன்று முறை அறிவிப்பு அனுப்பப்படும். ஆவண எண். பி 205/1996 யை பொறுத்து மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு அறிவிப்புகளின் ஒன்றை எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கவேண்டும் என்றால் சரிதான். அதுபோல மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பபட்டதாகவோ மனுதாரரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவோ எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். எழுதி கொடுத்தவரின் கையொப்பம் இல்லாததால் தான் அடிப்படையிலேயே அது பதிவு இயலாத முடிவுறா ஆவணம் என்று சொல்லி திருப்பி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு கால அவகாசம் கோரியதன் பெயரில் ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi.